**செய்தி வெளியீடு எண்: 349** **நாள்: 31.05.2018**

## <u>மாநில திறன் மாநாடு – 2018</u>

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் வாயிலாக மாநில திறன் மாநாடு சென்னை, கிண்டியில் உள்ள Advanced Training Instutite (A.T.I.)-ல் வருகின்ற 09.06.2018 மற்றும் 10.06.2018 ஆகிய இரு தினங்களில் நடத்தப்பட உள்ளது. இம்மாநாட்டை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார். இம்மாநாட்டில், மாவட்ட அளவிலான திறன் போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்களின் திறன் படைப்புகள் பார்வைக்கு வைக்கப்படும். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர்கள், பல்வேறு தொழில் கூட்டமைப்புகள் மற்றும் Sector Skill Council உறுப்பினர்கள் ஆகியோர் கொண்ட குழு இத்திறன் படைப்புகளை மதிப்பீடு செய்யும். இதனில் தெரிவு செய்யப்படும் படைப்புகளுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000/–மும், இரண்டாம் பரிசாக ரூ.50,000/–மும் வழங்கப்படும். மேலும் தொழில் நிறுவனங்களின் படைப்புகளும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் திறன் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் குறித்த பதாகைகளும் இம்மாநாட்டில் காட்சிப்படுத்தப்படும். தமிழ்நாட்டின் திறன் சூழல் – திறன் முனைப்புகள் மற்றும் வாய்ப்புகள், உலக அளவிலான திறன் பயிற்சி குறித்த சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்புகளில் துறை வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கங்களும் நடத்தப்படும்.

இம்மாநாட்டைத் தொடர்ந்து 11.06.2018 மற்றும் 12.06.2018 ஆகிய தினங்களில் தனித்திறன் தேடும் நிகழ்வு (Individual Skills Hunt) நடைபெறும். இது தொடர்பான நிகழ்வுகள் அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி, அம்பத்தூர் மற்றும் Advanced Training Instutite – கிண்டி ஆகிய இடங்களில் நடத்தப்படும். இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 01.01.1997 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பிறந்தவர்களாக இருக்க வேண்டும். திறன் தேடலில் பங்கேற்க விரும்பும் தகுதியான நபர்கள் www.tnskillshunt.in என்னும் இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஏற்கனவே மாவட்ட அளவில் நடைபெற்ற திறன் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் தகுதியானவர்கள் தனி திறன் தேடலில் நேரடியாக பங்கேற்கலாம். மாநில அளவில் நடத்தப்படும் இத் தனி திறன் தேடலில் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஜுன் 21 – 23, 2018ல் பெங்களூரில் நடைபெறும் மண்டல அளவிலான திறன் போட்டியிலும் மற்றும் ஜுலை 2018ல் புதுடெல்லியில் நடைபெறும் தேசிய அளவிலான திறன் போட்டியிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெறுவார்கள். திறன் தகுதி பெற்ற இளைஞர்கள் இந்நல்வாய்ப்பினைப் பயன்படுத்தி கொள்ள வேண்டுமென தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**